நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 149/2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | அங்கமுத்து |
| கிராமம் | : | குஞ்சாண்டியூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 28 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 07–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.05.pm

1. நான் தற்போது குஞ்சாண்டியூரில் குடியிருக்கிறேன். நான் பென்னாகரம் ஏரியூரை சேர்ந்தவர். சுமார் 1 வருடத்திற்கு முன்பு நான் நங்கவள்ளியில் துணி எடுத்துவிட்டு குஞ்சாண்டியூரிலுள்ள வீட்டிற்கு வருவதற்காக இரவு 08.30 மணியளவில் பல்சர் இருச்சக்கர வாகனத்தில் நான் வண்டியை ஓட்ட எனக்கு

பின்னால் என்னுடைய மகள், அவருக்கு பின்னால் என்னுடைய மனைவி விஜயா ஆகியோருடன் முனியப்பன் கோவில் அருகே வந்துக்கொண்டிருந்தேன்.

2. எனக்கு பின்னால் டெம்போவை ஓட்டிவந்தவர் நான் சென்ற இருச்சக்கர வாகனத்தின் மீது மோதினார். இந்த விபத்தில் எனது மனைவி வலதுக்கால் மீது மோதி முற்றிலுமாக கால் துண்டித்துவிட்டது. எனக்கும், என் மகளுக்கும் லேசான காயம். ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தோம்.
3. மேல்சிகிச்சைக்காக அங்கிருந்து சேலத்திலுள்ள பிரீத்தம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். அடுத்தநாள் என் மனைவி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். சேலம் தனியார் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
4. விபத்து நடந்தவுடன் என்னுடைய மனைவியையும், குழந்தையையும் காப்பாற்ற முயற்சி செய்ததால் விபத்து ஏற்படுத்தியவரை நான் பார்க்கவில்லை. விபத்து ஏற்படுத்திய வாகனம் கவிழ்ந்து விட்டது. விபத்து நடந்த சமயத்தில் நங்கவள்ளியிலிருந்து குஞ்சாண்டியூர் நோக்கி சென்றுக்கொண்டிருந்தேன். இந்த விபத்திற்கு வண்டியை ஓட்டிவந்தவர் தான் காரணம். அதிவேகமாக வண்டியை ஓட்டிவந்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்து நடந்த மறுநாள் போலீசார் என்னை தனியார் மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். போலீசார் என்னை விசாரித்தபோது இந்த விபத்து சம்மந்தப்பட்ட வாகனத்தின் பதிவெண்களை நான் சொல்லவில்லை. நங்கவள்ளியில் தேர்முட்டிக்கு அருகில் உள்ள நியூ இன்பா துணிக்கடையில் துணி எடுக்க சென்றிருந்தேன்.
2. யார்யார் துணி எடுக்க சென்றோம் என்றால் நாங்கள் 3 நபர்கள் மற்றும் எனது மச்சினன் மற்றும் வெங்கடேசன் ஆகியோர் சென்றோம். எனது மச்சினன் மற்றும் வெங்கடேசன் ஆகியோர் எனக்கு 20 அடி பின்னால் வந்துக்கொண்டிருந்தார்கள். விபத்து நடந்து எவ்வளவு நேரம் கழித்து 2 நபர்களும் வந்தார்கள் என்றால் 1 நிமிடத்தில் வந்துவிட்டார்கள். அவர்கள்தான்

எனக்கு முதலுதவி செய்தார்கள். அந்த சமயத்தில் மழை பெய்யவில்லை.

3. எனக்கு பின்னால் வந்த வாகனம் எனது வாகனத்தின் சைலன்சர் பகுதியில் மோதியது. தனியார் மருத்துவமனையில் என்னை போலீசார் விசாரித்த பிறகு காவல் நிலையத்தில் வைத்து 30 ம் தேதி என்னை விசாரித்தார்கள். வாகனத்தின் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநர் பெயர், ஊர் உள்ளிட்ட விவரங்களை மேற்கண்டவாறு 30 ம் தேதி என்னை விசாரிக்கும்போது நான் சொல்லவில்லை.
4. வெங்கடேசன் என்பவர் என்னுடன் வேலை செய்பவர். என் மச்சனன் என்ன வேலை எங்கு செய்கிறார் என்றால் ைஹதராபாத்தில் சிப்ஸ் கடை வைத்துள்ளார். தீபாவளி விடுமுறைக்காக வந்திருந்தார். நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சம்பவம் சமயத்தில் மழை பெய்துக்கொண்டிருந்ததால் நான் உட்பட 3 பேர் இருச்சக்கர வாகனத்தில் பயணம் செய்ததால் மழை ஈரத்தில் நான் சரிக்கிவிட்டு கீழே விழுந்ததால் எங்கள் மீது மோதாமல் இருப்பதற்காக பின்னால் வந்த வாகனம் வலதுப்புறமாக திருப்பியதால் பின்னால் வந்த வாகனம் கவிழ்ந்துவிட்டது என்றாலும் சரியல்ல.
5. நான் சொன்னவாறு எனக்கு பின்னால் வந்த நான்கு சக்கர வாகனம் எனது இருச்சக்கர வாகனத்தின் பின்புறமாக மோதியிருந்தால் எனது இருச்சக்கர வாகனத்திற்கு பின்புறம் ஏதேனும் சேதாரம் ஏற்பட்டிருக்கும் என்றாலும், நான் சொன்னவாறு விபத்து நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு இருச்சக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை. என்னுடைய கவனக்குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.25PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 149/2025**

**P.W.2 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கோவிந்தராஜ் |
| தந்தை / கணவர் பெயர் | : | காவேரி |
| கிராமம் | : | கொங்கரப்பட்டி |
| வட்டம் | : | பென்னாகரம் |
| மாவட்டம் | : | தருமபுரி |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 26 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 07–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.26.pm

1. நான் தற்போது பென்னாகரம் தாலுக்கா கொங்கரப்பட்டியில் குடியிருக்கிறேன். நான் சிப்ஸ் கடையில் வேலை செய்கிறேன். அ.சா.1 என்னுடைய மாமா ஆவார். 29.10.2024 ம் தேதியன்றுதான் அ.சா.1 ன் வீட்டிற்கு ைஹதராபாத்திலிருந்து வந்தேன். என்னுடைய மாமா அ.சா.1 வேலைக்கு சென்றுவிட்டு மாலை

வீட்டிற்கு வந்தார்.

2. தீபாவளிக்கு துணி எடுப்பதற்காக என்னுடைய பல்சர் TN 29 CD 0462 இருச்சக்கர வாகனத்தில் அ.சா.1 அவருடைய மகள் மற்றும் அவரது மனைவி ஆகியோரை உட்கார வைத்துக்கொண்டு குஞ்சாண்டியூரிலிருந்து நங்கவள்ளி சென்று துணி எடுத்துக்கொண்டு வீட்டிற்கு திரும்ப வீரக்கல் முனியப்பன் கோவில் அருகே வந்துக்கொண்டிருந்தோம். அ.சா.1 ஓட்டிவந்த இருச்சக்கரவாகனத்திற்கு பின்னால் ஸ்கூட்டி இருச்சக்கர வாகனத்தில் நானும், வெங்கடேசன் என்பவரும் வந்துக்கொண்டிருந்தோம்.
3. எங்களுக்கு பின்னால் TN 90 H 7689 பிக்கப் வாகனத்தை அதிவேகமாக ஓட்டிவந்த ஆஜர் எதிரி எங்களை முந்திச்சென்று எங்களுக்கு முன்னால் சென்ற அ.சா.1 ஓட்டிசென்ற இருச்சக்கர வாகனத்தின் சைலன்சர் மேல் மோதி விபத்தை ஏற்படுத்தினார். அதில் எனது தங்கைக்கு வலதுக்கால் முழுவதுமாக நசுங்கி பிதுங்கி விட்டது. குழந்தைக்கு நெற்றியிலும், அ.சா.1 ற்கு தலையிலும், காலிலும் காயம் ஏற்பட்டது.
4. ஆம்புலன்ஸ் மூலம் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு காயம்பட்ட 3 பேரையும் அழைத்துச்சென்றோம். அங்கிருந்து சேலம் பிரீத்தம் தனியார் மருத்துவமனைக்கு பலத்த காயம் அடைந்த எனது தங்கை விஜயாவை சிகிச்சையில் சேர்த்தோம். அடுத்தநாள் சிகிச்சை பலனின்றி எனது தங்கை இறந்துவிட்டார். அதில் பல்சர் வண்டிக்கு டும் மற்றும் பம்பர் சேதமடைந்தது. பிரேக் கட்டை மற்றும் பெட்ரோல் டேங்க் ஆகியவை சேதமடைந்தது. ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்தியவர்.
5. இந்த விபத்திற்கு ஆஜர் எதிரிதான் காரணம். அவர்தான் வேகமாக வண்டியை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தினார். நாங்கள் வந்த ஸ்கூட்டியின் பதிவெண் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்து நடந்தன்று பிரீத்தம் மருத்துவமனையில் வைத்து என்னை போலீசார் விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு 10 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் வைத்து 1 முறை என்னை விசாரித்தார்கள். நான் தான் காயம்பட்ட 3 நபரையும் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். விபத்து எவ்வாறு நடைபெற்றது என்ற விவரத்தை நான்தான் மருத்துவரிடம் சொன்னேன்.

2. அ.சா.1 குமார் ஓட்டிச்சென்ற பல்சர் வாகனம் என்னுடையதுதான். நான் ஓட்டிச்சென்ற ஸ்கூட்டி வெங்கடேசன் என்பவருடையது ஆகும். நான் சம்பவத்தின்போது வெங்கடேசன் என்பவரின் வாகனத்தில் பின்புறமாக அமர்ந்து சென்றேன். அந்த வாகனம் என்னுடைய வாகனம் என்று காவல் துறை விசாரணையில் சொல்லவில்லை.

3. நங்கவள்ளி பேருந்து நிலையத்திலிருந்து காவல் நிலையம் செல்லும் வழியில் உள்ள ஒரு கடையில் துணி எடுக்க சென்றோம். அந்த கடையின் பெயர் எனக்கு தெரியாது. அ.சா.1ன் இருச்சக்கர வாகனம் எனது இருச்சக்கர வாகனத்திற்கு சுமார் 50 அடி முன்பாக சென்றுக்கொண்டிருந்தது.

4. அ.சா.1 ன் இருச்சக்கர வாகனத்தில் குழந்தை நடுவிலும், அ.சா.1 ன் மனைவி பின்புறமாகவும் அமர்ந்து பயணம் செய்தார்கள். நங்கவள்ளியிலிருந்து நாங்கள் செல்லும்போது முனியப்பன் கோவில் தாண்டிதான் விபத்து ஏற்பட்டது. முனியப்பன் கோவில் தாண்டி எவ்வளவு தூரத்தை தாண்டி விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நியாபகம் இல்லை. நான் அப்போது பதட்டத்தில் இருந்தேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்காததால் தான் அவ்வாறு தெரியவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது மழைபெய்து கொண்டிருந்தது என்றால் சரியல்ல.

5. பிக்கப் வாகனத்தின் இடதுமுன்பக்கம் பல்சர் வண்டியின் சைலன்சர் மீது மோதியது. எனக்கும் பிக்கப் வாகனத்திற்கும் சுமார் 50 அடி தூரம் இருக்கும். விபத்து நடந்ததாக சொல்லப்படும் பகுதி இருட்டான பகுதி என்றால் சரிதான். நான் இருச்சக்கர வாகனத்தில் இரவு நேரத்தில் பின்புறமாக அமர்ந்துக்கொண்டு பயணம் செய்துக்கொண்டிருக்கும்போது எனக்கு முன்பாக என்னை முந்திக்கொண்டு 50 அடி தூரத்தில் சென்றுக்கொண்டிருந்த பிக்கப் வாகனம் அதற்கு முன்னால் சென்றுக்கொண்டிருந்த இருச்சக்கர வாகனத்தில் எவ்வாறு மோதியது என்று நான் பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

6. ஆம்புலன்சிற்கு அருகிலிருந்தவர்கள் தகவல் சொன்னார்கள். 10 நிமிடத்தில் ஆம்புலன்ஸ் அங்கு வந்துவிட்டது. ஆம்புலன்சில் நானும் பயணம் செய்தேன். நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும், நான் சொன்னவாறு காயம்பட்ட நபர்களை நான் சிகிச்சைக்கு சேர்க்கவில்லை என்றாலும், அவ்வாறு

நான் சிகிச்சைக்கு கொண்டுசென்று சேர்ந்திருந்தால் எனது பெயரை விபத்து பதிவேட்டு அறிக்கையில் பதிவுசெய்திருப்பார்கள் என்றாலும் சரியல்ல.

7. நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சம்பவம் சமயத்தில் மழை பெய்துக்கொண்டிருந்ததால் அ.சா.1 உட்பட 3 பேர் இருச்சக்கர வாகனத்தில் பயணம் செய்ததால் மழை ஈரத்தில் அ.சா.1 சரிக்கிவிட்டு கீழே விழுந்ததால் அவர்கள் மீது மோதாமல் இருப்பதற்காக பின்னால் வந்த வாகனம் வலதுப்புறமாக திருப்பியதால் பின்னால் வந்த வாகனம் கவிழ்ந்துவிட்டது என்றாலும் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையினால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 என்னுடைய உறவினர் என்பதால் நான் சம்பவத்தை நேரடியாக பார்க்காமல் தற்போது வழக்கிற்காக சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.50PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 149/2025

## P.W.3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | வெங்கடேசன் |
| தந்தை / கணவர் பெயர் | : | சிவன் |
| கிராமம் | : | புதுச்சாம்பள்ளி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW3** |
| வயது | : | 28 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 07–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.51.pm

1. நான் தற்போது புதுச்சாம்பள்ளியில் குடியிருக்கிறேன். நான் மேசன் வேலை செய்கிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனக்கு தெரிந்தவர்கள். 1 வருடம் முன்பு நங்கவள்ளியிலுள்ள கடையில் துணி எடுப்பதற்காக நானும், அ.சா.2 ம் மற்றும் அ.சா.1 மற்றும் அவருடைய மகள் மற்றும் மனைவி ஆகியோருடன் இரண்டு

இருச்சக்கர வாகனத்தில் தனித்தனியாக சென்றோம்.

2. துணி எடுத்துவிட்டு இரவு 08.30 மணியளவில் வீரக்கல் முனியப்பன் கோவில் அருகே அ.சா.1 அவருடைய மகள் மற்றும் மனைவி ஆகியோரை உட்கார வைத்துக்கொண்டு அவர் எங்களுக்கு முன்னால் அவருடைய இருச்சக்கர வாகனத்தில் சென்றார். நானும், அ.சா.2 ம் டியோ இருச்சக்கர வாகனத்தில் அவருக்கு பின்னால் வந்துக்கொண்டிருந்தோம். எனக்கு அ.சா.1 ஓட்டிவந்த வாகனத்தின் பதிவெண்ணும், என்னுடைய வாகனத்தின் பதிவெண்ணும் தெரியவில்லை.

3. எங்களுக்கு பின்னால் அதிவேகமாக பிக்கப் வண்டியை ஓட்டிவந்த ஆஜர் எதிரி அ.சா.1 ன் இருச்க்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். விபத்தில் அ.சா.1 ன் மனைவிக்கு காலில் அடிப்பட்டது. பிறகு ஆம்புலன்ஸ் மூலமாக மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அங்கிருந்து சேலத்திலுள்ள பிரீத்தம் மருத்துமனையில் விஜயாவை சிகிச்சைக்கு சேர்த்தோம்.

4. அடுத்தநாள் சிகிச்சையில் இருந்த விஜயா இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். இந்த விபத்திற்கு பிக்கப் வாகனத்தை ஓட்டிவந்த ஆஜர் எதிரிதான் காரணம். நாங்கள் இடதுப்பக்க ஓரமாக தான் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்தோம். எதிரி பிக்கப் வண்டியை முந்தி சென்று திடீரென பிரேக் போட்டு அ.சா.1 சென்ற இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்தினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 குமார் ஓட்டிச்சென்ற வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. எதிரி ஓட்டிவந்த பிக்கப் வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் சம்பவத்திற்கு மறுநாள் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். அந்த விசாரணையில் விபத்து சம்மந்தப்பட்ட வாகனங்களின் பதிவெண்களை நான் சொல்லவில்லை.

2. நங்கவள்ளியில் உள்ள நியூ பேசன் கடைக்கு துணி எடுக்க சென்றோம். பல்சர்

வாகனத்தின் எந்த பகுதியில் பிக்கப் வாகனம் மோதியது என்று நான் 50 அடி தொலைவில் வந்துக்கொண்டிருந்ததால் பார்க்கவில்லை. விபத்து நடந்து முடிந்துதான் நான் சென்று பார்த்தேன். போலீசார் விசாரணையில் தற்போது சொன்னவாறு தான் சொல்லியுள்ளேன்.

3. ஆம்புலன்சிற்கு அருகிலிருந்து பொதுமக்கள்தான் தகவல் சொன்னார்கள். ஆம்புலன்சில் யார்யார் சென்றார்கள் என்றால் அ.சா.1 மற்றும் அவரது மனைவி, குழந்தை சென்றார்கள். நானும், கோவிந்தாஜும் பிரீத்தம் மருத்துவமனை சென்றுதான் பார்த்தோம். விபத்து நடந்தவுடன் கோவிந்தராஜ் ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். நான் பிரீத்தம் மருத்துவமனைக்கு அதன்பின்னிட்டு சென்று பார்த்தேன்.

4. முனியப்பன் கோவில் தாண்டி 30 அடி தள்ளி இந்த விபத்து ஏற்பட்டது. காவல் துறை விசாரணையில் நான் பயணம் செய்த இருச்சக்கர வாகனம் கோவிந்தராஜுக்கு சொந்தமானது என்று நான் சொல்லவில்லை. இந்த சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், அ.சா.1 என்னுடன் வேலை பார்க்கும் நபர் என்பதால் நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில்மழை பெய்யவில்லை.

5. நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சம்பவம் சமயத்தில் மழை பெய்துக்கொண்டிருந்ததால் அ.சா.1 உட்பட 3 பேர் இருச்சக்கர வாகனத்தில் பயணம் செய்ததால் மழை ஈரத்தில் அ.சா.1 சரிக்கிவிட்டு கீழே விழுந்ததால் அவர்கள் மீது மோதாமல் இருப்பதற்காக பின்னால் வந்த வாகனம் வலதுப்புறமாக திருப்பியதால் பின்னால் வந்த வாகனம் கவிழ்ந்துவிட்டது என்றாலும் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையினால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.10 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 149/2025

## P.W.4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கணேசன் |
| தந்தை / கணவர் பெயர் | : | காவேரி |
| கிராமம் | : | தின்னபெல்லூர் |
| வட்டம் | : | பென்னாகரம் |
| மாவட்டம் | : | தருமபுரி |
| சாட்சி வரிசை எண் | : | **PW4** |
| வயது | : | 52 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 07–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.11.pm

1. நான் தற்போது தின்னபெல்லூரில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். அ.சா.1 என்னுடைய அண்ணார் மகன். அ.சா.1 குஞ்சாண்டியூரில் குடியிருந்து கட்டிடவேலை செய்து வந்தார். சுமார் 1 வருடத்திற்கு முன்பு அ.சா.1 நங்கவள்ளியில் துணி எடுக்க சென்றுவிட்டு திரும்பி வரும்போது விபத்து

ஏற்பட்டதாக சொன்னார்கள். தகவல் அறிந்து சேலத்திலுள்ள தனியார் மருத்துவமனை சென்று காயமடைந்த விஜயாவை சென்று பார்த்தேன்.

2. அடுத்தநாள் சிகிச்சை பலனின்றி விஜயா இறந்துவிட்டார். நான் விசாரித்தபோது அ.சா.1 குடும்பத்துடன் இருச்சக்கர வாகனத்தில் சென்றபோது பிக்கப் வண்டி மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்து நடந்த 3 நாட்கள் பிறகு நங்கவள்ளி காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னை விசாரித்தனர். விபத்து சம்மந்தப்பட்ட வாகனங்களின் பதிவெண் தற்போது எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் இருந்த வாகனங்கள் பார்த்து காவல் துறை விசாரணையில் பதிவெண்ணை குறிப்பிட்டேன்.

2. நான் கேள்விபட்ட விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், பிக்கப் வாகனத்தின் ஓட்டுநரின் அஜாக்கிரதையினால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—01.15 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/— நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**